எம்.சி.ஓ.பி எண்: 533/2014 தேதி: 04.06.2025

எ.மசா. : 1

பெயர் :கனிமொழி

த/பெ. : லோகன்

வயது : 28

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ.மசாஆ 1 முதல் 3 வரை தாக்கல் செய்கிறேன்.

**<u>மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்திற்கு காரணமான வேனின் பதிவெண் TN–20–BJ–3781 என்றால் சரி. அந்த வாகனம் விபத்து தேதியில் எங்கள் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரி. எமசாஆ 3 ஆவணத்தின் காப்பீட்டின் டேம்ஸ் அன்ட் கண்டிசன்ஸ் கூறப்படவில்லை என்றால் சரி. குமார் மீது ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கான பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாகனத்தின் உரிமையாளர் முதலாம் எதிர்மனுதாரர் என்றால் சரி. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட கொடுத்ததற்காக முதலாம் எதிர்மனுதாரர் மீது பிரிவு 5ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எமசாஆ 2 ஆவணம் ஏ.சி, டி.சி, ஏ.பி.பி அனுமதி பெற்றதா என்றும் எந்த அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் உரிமையாளரும், ஓட்டுநரும் அபாரதம் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. காப்பீடு நிலுவையில் இருப்பதால் வாகனத்தின் உரிமையாளருக்காக பிரிவு 170ன் கீழ் மனு போட்டுள்ளோம். எனவே நாங்கள்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் இல்லை.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.